(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 6 ]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, ஜூன் 12, வெள்ளிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0010 / ' 09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அதிமேதகு சனாதிபதி வெளிநாட்டுக்கு மேற்கொண்ட பயணங்களின் எண்ணிக்கையினையும்,

(ii) நாடுகளின் பெயர்களையும்,

(iii) உடன் சென்றவர்களின் எண்ணிக்கையையும்,

(iv) உடன் சென்றமைக்கான காரணங்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இந்த வெளிநாட்டுப் பயணங்களுக்காக ஏற்பட்ட செலவையும்,

(ii) அந்தப் பயணங்களினால் நாட்டுக்குக் கிடைத்த குறிப்பிடத்தக்க பயனையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0103 / '09

2.

கௌரவ ஆர்.பி.ஏ. ரணவீர பதிரண,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விசர்நாய்க்கடி நோய்க்காக 2005, 2006, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் எத்தனை நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்பதையும்,

(ii) இவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக இறக்குமதி செய்யப்பட்ட விசர்நாய்க்கடி நோய்த் தடுப்பு மருந்துகளின் தொகை எவ்வளவு,

(iii) அதற்காக வருடாந்தம் செலவிடப்பட்ட தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) விசர்நாய்க்கடி நோயைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை,

(ii) இதற்கென வருடாந்தம் ஒதுக்கப்பட்டுள்ள மற்றும் செலவிடப்பட்டுள்ள தொகை யாது,

(iii) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரை மரணமடைந்த விசர்நாய்க்கடி நோயாளிகளின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0193 / '09

3.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2009 ஆம் ஆண்டின் வரவுசெலவு திட்டத்தில் கடற்றொழில் துறைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நன்னீர் மீன்பிடித்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வள வென்பதையும்,

(ii) இறால் வளர்ப்புக்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) "மிகின் எயார்" விமானச் சேவைக்காக 2009 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் ஆறாயிரம் மில்லியன் பணத்தொகை ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் கடற்றொழில் துறைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை போதாதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0286 / '09

4.

கௌரவ எம் ஜோசப் மைக்கல் பெரேரா,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2007.07.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட வினாவிற்கு பதிலளிக்கும் போது, இரத்தினபுரி பொது வைத்தியசாலையில் 2002.08.28 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின் மூலம் திரு.எச்.ஆர்.எம்.பீ.பீ கம்பாரவத்தையின் இடது கரத்தின் 5 ஆம் விரல் முழுமையாகவும் 4 ஆம் விரலின் இரண்டு விரற் கணுக்களும் அகற்றப்பட்டதென குறிப்பிடப்பட்ட தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) தவறான சிகிச்சையின் காரணமாக விரலொன்றும் மற்றுமொரு விரலின் இரண்டு கணுக்களும் அகற்றப்பட்டமை தொடர்பாக விசாரணை மற்றும் திடீர் சுற்றிவளைப்பு பிரிவின் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட அறிக்கையை விசேட வைத்திய நிபுணர் குழாத்திற்கு ஆற்றுப்படுத்திய பின்னர் இக்குழாமின் விதப்புரை சகிதம் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) இவ்விதப்புரையின் பிரகாரம் இப்பிரச்சினை வைத்தியர்களின் கவனயீனம் காரணமாக இடம்பெற்றிருக்குமாயின் சம்பந்தப்பட்ட நோயாளிக்கு நியாயமானதொரு இழப்பீட்டினைப் பெற்றுத்தருவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) அவ்வாறாயின் குறித்த நட்டஈட்டை பெற்றுக்கொடுப்பது எப்போது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0018 / ' 09

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1 )

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரைக்கும் ஈரானினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவி, மானியம், வாக்குறுதியளிக்கப்பட்டவை ஆகியவற்றின் மொத்த அளவை அவற்றிற்குரிய வட்டி வீதத்துடன் வருடாந்த அடிப்படையிலும்,

(ii) இலங்கைக்கு வழங்கப்பட்ட வேறு ஏதாவது விசேட உதவியையும்,

(iii) அவ்வாறாயின், அதன் திகதி, தொகை ஆகியவற்றையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை இலங்கை ஈரானிற்கு பதிலீடாகத் திருப்பிக் கொடுத்தது என்ன என்பதை வருடாந்த ரீதியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) ஐக்கிய நாடுகள் சபையினால் ஈரான் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு எதிராக ஏதாவது பொருட்களை அவர்களுக்கு நாம் விற்பனை செய்துள்ளோமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) 2001 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரையான காலப்பகுதியின் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் இலங்கைக்கும் ஈரானிற்கும் இடையிலான சென்மதி நிலுவை எவ்வளவு என்பதை அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0104 / '09

6.

கௌரவ ஆர்.பி.ஏ. ரணவீர பதிரன,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) ரணவிரு லொத்தர் எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது,

(ii) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டின் இறுதிவரை லொத்தர் விற்பனையின் மூலம் ஈட்டப்பட்ட தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ரணவிரு லொத்தர் சீட்டுகளை விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட வருமானத்தில் ஒவ்வொரு ஆண்டும் இராணுவ வீரர்களது நலனோம்பு கைக்காக எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது,

(ii) மேற்படி ஒவ்வொரு ஆண்டும் ஈட்டப்பட்ட வருமானத்தில் எத்தனை சதவீதம் ஒவ்வொரு நடவடிக்கைக்காகவும் ஒதுக்கப்பட்டது,

(iii) இராணுவ வீரர்களது நலனோம்புகைக்காக ஒதுக்கப்பட்ட சதவீதம் எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0194 / '09

7.

கௌரவ பேமசிறி மானகே,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில் முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2008 டிசம்பர் மாதம் 01ஆம் திகதி முதல் இற்றைவரை சுயாதீன தொலைக்காட்சி நிருவனமும் தேசிய தொலைக்காட்சி நிருவனமும் விளம்பர பிரசாரம் மூலம் ஈட்டிக்கொண்ட பணத்தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) "ஸ்ரீ லங்கா டெலிகொம் நிருவனத்தின் விளம்பரங்கள் மற்றும் ஸ்ரீ லங்கா டெலிகொம் நிருவனம் அல்லாத விளம்பரங்கள் எனும் வகையில் எத்தனை விளம்பரங்கள் எவ்வளவு காலம் ஒளிபரப்பப்பட்டதென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) ஸ்ரீ லங்கா டெலிகொம் நிருவனத்தின் விளம்பரங்கள் மூலமாகவும் ஸ்ரீ லங்கா டெலிகொம் நிருவனம் அல்லாத விளம்பரங்கள் மூலமும் ஈட்டிய பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0021 / '09

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைவரையான கடந்த 04 வருட காலத்தில் அமைச்சிற்காகவும் அமைச்சிற்குச் சொந்தமான ஏதாவது கம்பனிக்காகவும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் மொத்தச் செலவினையும், அலுவலகத்தினை வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெறுவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகையினையும் வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட பாவனைக்கான எரிபொருள் செலவினை, அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவின் சதவீதத்திலும்,

(ii) வாடகைக்கு எடுக்கப்பட்ட அலுவலகத் தளத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்

மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) கட்டிடமானது குத்தகைக்கு எடுக்கப்பட்ட காலப்பகுதியினையும் வைப்பாக செலுத்தப்பட்ட முன்கொடுப்பனவையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0106 / '09

9.

கௌரவ ஆர்.பி.ஏ. ரணவீர பத்திரண,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்தற்கு,—(1)

(அ) (i) மொறகாகந்த நீர்த்தேக்கத்தை அமைக்கும் பணி எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது,

(ii) அதற்காக மதிப்பிட்ட பணம் எவ்வளவு,

(iii) இக்கருத்திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தால் 2006,2007,2008 ஆகிய வருடங்களுக்காக வருடாந்தம் ஒதுக்கப்பட்டுள்ள பணம் எவ்வளவு,

(iv) அவ்வாறு வருடாந்தம் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து எவ்வளவு பணம் அந்தந்த வருடங்களில் செலவிடப்பட்டுள்ளது,

(v) மதிப்பிடப்பட்ட பணத்தில் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வருடத்திலும் சம்பந்தப்பட்ட கருத்திட்டத்திற்குக் கிடைக்காமல் உள்ள பணம் எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இக்கருத்திட்டப் பணிகளை எத்தேதியில் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கின்றார் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0195 /'09

10.

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தற்போதுள்ள கணக்காய்வு அதிபதியின் முழுப்பெயர் அவர் இப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி என்பவை யாவையென்பதையும்,

(ii) இவரது பதவிக்காலம் எப்போது முடிவடைகின்றது என்பதையும்,

(iii) கணக்காய்வு அதிபதியை இப்பதவிக்கு நியமித்தவர் யார் என்பதையும்,

(iv) கணக்காய்வு அதிபதியொருவரை நியமனம் செய்ய வேண்டியவர் யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி நபர் குறித்த பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளமை சட்டபூர்வமற்ற தென அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 1.30 மணிவரை இருக்குமாக. பி. ப. 12.30 மணிக்கு 7 (5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

கௌரவ (திருமதி) நிரூபமா ராஜபக்ஷ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

“நியோமால் பெரேரா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்தல்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 06, 2007) “வினைத்திறமை மிக்கதோர் நிர்வாகத்தை மேற்கொள்ளுமுகமாகவும் தமது அமைச்சர்களது செயற்பாடுகளை விமர்சனரீதியாக ஆய்வு செய்வதற்கு ஏதுவான வகையில் சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப் பெற்றது. [ பா.3/ ’05]

பா.1 / ’ 09

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஆயுதங்களை பதிவு செய்தல்,— இலங்கையிலுள்ள அனைத்து ஆயுதங்களையும் பதிவுசெய்ய வேண்டுமெனவும் அவ்வாறு பதிவு செய்ததின் பின்னரும் யாரிடமாவது அதிகாரமற்ற ஆயுதங்கள் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் குறித்த நபருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டு 20 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.2 / ’ 09

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வங்கி அலுவலக நேரத்தை நீடித்தல்,— நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துமுகமாக வங்கி அலுவலக நேரத்தினை 9.00 மணி முதல் 16.00 மணிவரை நீடிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.3 / ' 09

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிடுதல்,— மிக சுதந்திரமாகவே மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவது நாட்டின் ஒழுக்கவிழுமியங்களுக்கு பங்கமேற்படுத்தி வருவதால் கோட்டே தேர்தல் தொகுதியில் உள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களையும் மூடிவிட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.4 / ' 09

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊடகவியலாளர்களுக்கு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக் குழுக்கூட்டங்களில் பிரசன்னமாயிருக்க அனுமதியளித்தல்,— அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக்குழுக் கூட்டங்களில் இதுபோன்ற கலந்துரையாடல்கள் மிக விளைபயனுடையதாகவும் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் வெளிப்படையானதுமாக அமைய ஏதுவாக இருக்கும் என்பதால், ஊடகவியலாளர்களுக்கு அதில் பிரசன்னமாயிருக்க அனுமதியளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.5 / ' 09

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவிகளை அளித்தல்,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவியாக அதிகபட்ச கடனாக 2,50,000 ரூபாவை 5% குறைந்த வட்டி வீதத்தில் வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.6 / ' 09

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்குதல்,— நாட்டினுள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போன்றவற்றின் பாவனை வேகமாக அதிகரித்து வருவதாலும் அவ்வாறான கழிவுப் பொருட்களை பாரதூரமின்றி அகற்றுவதனால் ஏற்படும் பாரியளவு சுற்றாடல் மாசுபடுதல் நிமித்தமும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.7 / ' 09

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வங்கிகளிலிருந்து கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுதல்,— அரச வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுவதற்காக சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.8 / ' 09

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் செயற் படுத்தல்,— பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படும் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயனுள்ள பங்களிப்பொன்றாக அமைவதற்கு ஏதுவாக அவைகள் ஒரு வருடத்துக்குள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டால் ஆறுமாதங்களுக்குள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப் பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.9 / ' 09

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைத்தல்,— நாட்டில் தேசிய மனப்பாங்கை ஏற்படுத்துமுகமாக பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாகும் போதும் ஒத்திவைக்கும் போதும் பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டு மென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.10 / ' 09

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பலமான இலங்கை அடையாளத்தை ஏற்படுத்துதல்,— அரச ஆவணங்களில் ஒருவரது சாதியையும் சமயத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற தேவைப்பாடு பலமான தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவற்கு தடையாகவும் இடர்ப்பா டகவுமுள்ளதால் இத்தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.11 / ' 09

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக நோக்கங்களுக்காக சமயத் தலைவர்களின் உருவங்களை பயன்படுத்துவதை தடைசெய்தல்,— சகல சமயங்களும் சமமாக மதிக்கப் படல் வேண்டுமென்பதுடன் புத்தபெருமான், யேசுநாதர், சிவபெருமான், முஹம்மட் நபி (ஸல்) அவர்கள் ஆகியோரின் உருவங்களை வர்த்தக விளம்பரங்களிலோ வேறுவிதமான சமயசார்பற்ற படிவங்களிலோ பயன்படுத்தலை தடைசெய்தலும் வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.12 / ' 09

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடக வியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறை களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.13 / ' 09

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாதாந்த சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.14 / ' 09

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.15 / ' 09

16.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.16 / ' 09

17.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.17 / ' 09

18.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.18 / ' 09

19.

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்று உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்திறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு ''விசேட வழக்குத் தொடுநர்'' எனப்படும் பதவியொன்று உருவாக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.19 / ' 09

20.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்துதல்,— இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் போன்று, வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலுள்ள எதிரானதும் சார்பற்றதுமான தாக்கல்கள் ஏதும் இருப்பின் அவைகளை நிவர்த்தி செய்வதற்கும் தனிப்பதற்கும் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்தப்பட வேண்டு மென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.20 / ' 09

21.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21 / ' 09

22.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22 /'09

23.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.23 /'09

24.

கௌரவ லஷ்மன் நிபுணஆரச்சி,— ஓய்வு பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வு பணிக்கொடை பெற்றுக்கொள்ளப்படாத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

*25.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*26.

பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*27.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*28.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*29.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*30.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*31.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*32.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*33.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*34.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*35.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*36.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*37.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*38.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*39.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*40.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*41.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*42.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*43.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தி னால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*44.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*45.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*46.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

47.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.

பிரேமதாச கேகொட மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

50.

சமோதா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

51.

கருணா சமாதி ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

52.

கண்டி ஸ்ரீ கல்யானோதய சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.

சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அறபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.

எதிர்கால உலக ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55.

தெஹிவளை, கவுதான இஸ்லாமிய கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56.

கிராமிய ஊழியர்கள் மற்றும் இணைந்த கிராமிய வளங்கள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57.

லஸந்த அலகியவன்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

58.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

59.

சிஹல சரண பின் கெட்டய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0019 / '09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1 )

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரைக்கும் இந்தியாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவி, மானியம், வாக்குறுதியளிக்கப்பட்டவை ஆகிய வற்றின் மொத்த அளவை அவற்றிற்குரிய வட்டி வீதத்துடன் வருடாந்த அடிப்படையிலும்,

(ii) இலங்கைக்கு வழங்கப்பட்ட வேறு ஏதாவது விசேட உதவிகளையும்,

(iii) அவ்வாறாயின், அதன் திகதியையும் தொகையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை இலங்கை இந்தியாவிற்கு பதிலீடாகத் திருப்பிக் கொடுத்தது என்ன என்பதை வருடாந்தரீதியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) 2001 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரையான காலப்பகுதியின் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையிலான சென்மதி நிலுவை எவ்வளவு என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0020 / ' 09

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1 )

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரைக்கும் சீனாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவி, மானியம், வாக்குறுதியளிக்கப்பட்டவற்றின் மொத்த அளவை அவற்றிற்குரிய வட்டி வீதங்களுடன் வருட வாரியாகவும்,

(ii) இலங்கைக்கு வழங்கப்பட்ட வேறு ஏதாவது விசேட உதவியையும்,

(iii) அவ்வாறாயின், அதன் திகதி, தொகை ஆகியவற்றையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை இலங்கை சீனாவிற்கு பதிலீடாகத் திருப்பிக் கொடுத்தது என்ன என்பதை வருடாந்த ரீதியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) 2001 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரையான காலப்பகுதியின் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான சென்மதி நிலுவை எவ்வளவு என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0022 / '09

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) துறைமுகங்கள் விமானசேவைகள் அமைச்சிற்காகவும் அவ்வமைச்சுக்குச் சொந்தமான ஏதேனும் கம்பனிக்காகவும் கடந்த 4 வருடங்களாக இற்றை வரையில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் மொத்தச் செலவினை வருடாந்த அடிப்படையிலும், அலுவலக இடத்திற்காக வாடகைக்கு அமர்த்துவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகையினையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) இக்காலப்பகுதியில் இவ்வாகனங்களுக்கான எரிபொருளுக்கென செலவிடப் பட்ட மொத்தத் தொகையினை அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவின் நூற்றுவீதமாகவும்,

(ii) வாடகைக்குப் பெறப்பட்ட அலுவலக இடத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) குத்தகைக்கு கட்டிடம் பெறப்பட்ட காலத்தினையும் அதற்கு வைப்புப்பணமாகச் செலுத்தப்பட்ட முற்பணத்தையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0023 / '09

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைவரையான கடந்த 04 வருட காலத்தில் அமைச்சிற்காகவும் அமைச்சிற்குச் சொந்தமான ஏதாவது கம்பனிக்காகவும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் மொத்தச் செலவினையும், அலுவலகத்தினை வாடகைக்குப் பெறுவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகையினையும் வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட பாவனைக்கான எரிபொருள் செலவினை, அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவின் சதவீதத்திலும்,

(ii) வாடகைக்கு எடுக்கப்பட்ட அலுவலகத் தளத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்

மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) கட்டிடமானது குத்தகைக்கு எடுக்கப்பட்ட காலப்பகுதியினையும் வைப்பாக செலுத்தப்பட்ட முன்கொடுப்பனவையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0024 / '08

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைவரையான கடந்த 04 வருட காலத்தில் அமைச்சிற்காகவும் அமைச்சிற்குச் சொந்தமான ஏதாவது கம்பனிக்காகவும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் மொத்தச் செலவினையும், அலுவலகத்தினை வாடகைக்குப் பெறுவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகையினையும் வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட பாவனைக்கான எரிபொருள் செலவினை, அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவின் சதவீதத்திலும்,

(ii) வாடகைக்கு எடுக்கப்பட்ட அலுவலகத் தளத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்

மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) கட்டிடமானது குத்தகைக்கு எடுக்கப்பட்ட காலப்பகுதியினையும் வைப்பாக செலுத்தப்பட்ட முன்கொடுப்பனவையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0025 / '09

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைவரையான கடந்த 04 வருட காலத்தில் அமைச்சிற்காகவும் அமைச்சிற்குச் சொந்தமான ஏதாவது கம்பனிக்காகவும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் மொத்தச் செலவினையும், அலுவலகத்தினை வாடகைக்குப் பெறுவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகையினையும் வருடாந்த அடிப்ப டையில் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட பாவனைக்கான எரிபொருள் செலவினை, அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவின் சதவீதத்திலும்,

(ii) வாடகைக்கு எடுக்கப்பட்ட அலுவலகத் தளத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்

மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) கட்டிடமானது குத்தகைக்கு எடுக்கப்பட்ட காலப்பகுதியினையும் வைப்பாக செலுத்தப்பட்ட முன்கொடுப்பனவையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0026 / '09

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைவரையான கடந்த 04 வருட காலத்தில் அமைச்சிற்காகவும் அமைச்சிற்குச் சொந்தமான ஏதாவது கம்பனிக்காகவும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் மொத்தச் செலவினையும், அலுவலகத்தினை வாடகைக்குப் பெறுவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகையினையும் வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட பாவனைக்கான எரிபொருள் செலவினை, அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவின் சதவீதத்திலும்,

(ii) வாடகைக்கு எடுக்கப்பட்ட அலுவலகத் தளத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்

மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) கட்டிடமானது குத்தகைக்கு எடுக்கப்பட்ட காலப்பகுதியினையும் வைப்பாக செலுத்தப்பட்ட முன்கொடுப்பனவையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0027 / '09

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைவரையான கடந்த 04 வருட காலத்தில் அமைச்சிற்காகவும் அமைச்சிற்குச் சொந்தமான ஏதாவது கம்பனிக்காகவும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் மொத்தச் செலவினையும், அலுவலகத்தினை வாடகைக்குப் பெறுவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகையினையும் வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட பாவனைக்கான எரிபொருள் செலவினை, அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவின் சதவீதத்திலும்,

(ii) வாடகைக்கு எடுக்கப்பட்ட அலுவலகத் தளத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்

மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) கட்டிடமானது குத்தகைக்கு எடுக்கப்பட்ட காலப்பகுதியினையும் வைப்பாக செலுத்தப்பட்ட முன்கொடுப்பனவையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0028 / '09

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைவரையான கடந்த 04 வருட காலத்தில் அமைச்சிற்காகவும் அமைச்சிற்குச் சொந்தமான ஏதாவது கம்பனிக்காகவும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் மொத்தச் செலவினையும், அலுவலகத்தினை வாடகைக்குப் பெறுவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகையினையும் வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட பாவனைக்கான எரிபொருள் செலவினை, அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவின் சதவீதத்திலும்,

(ii) வாடகைக்கு எடுக்கப்பட்ட அலுவலகத் தளத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்

மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) கட்டிடமானது குத்தகைக்கு எடுக்கப்பட்ட காலப்பகுதியினையும் வைப்பாக செலுத்தப்பட்ட முன்கொடுப்பனவையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0029 / '09

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைவரையான கடந்த 04 வருட காலத்தில் அமைச்சிற்காகவும் அமைச்சிற்குச் சொந்தமான ஏதாவது கம்பனிக்காகவும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் மொத்தச் செலவினையும், அலுவலகத்தினை வாடகைக்குப் பெறுவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகையினையும் வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட பாவனைக்கான எரிபொருள் செலவினை, அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவின் சதவீதத்திலும்,

(ii) வாடகைக்கு எடுக்கப்பட்ட அலுவலகத் தளத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்

மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) கட்டிடமானது குத்தகைக்கு எடுக்கப்பட்ட காலப்பகுதியினையும் வைப்பாக செலுத்தப்பட்ட முன்கொடுப்பனவையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0034 / ' 09

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2004 ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு, 2004 தொடக்கம் 2008 வரை கொழும்பு மாவட்டம் தவிர்ந்த ஒவ்வொரு மாவட்டத்திலும்-

(i) சமுர்த்திப் பயனாளிகள் பெற்றுக் கொண்ட தொகையின் ரூபா பெறுமானம் எவ்வளவு என்பதையும்,

(ii) ஒவ்வொரு வருடத்திற்குமான பணவீக்கம் எவ்வளவு என்பதையும்,

(iii) ஒவ்வொரு வருடத்திற்குமான பணவீக்கத்தை பணச்சுருக்கம் செய்த பின்னர் நிலவிய உண்மையான கொள்வனவுச் சக்தியையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?